# பணியிடங்களில் பாலின துன்புறுத்துதலுக்கு எதிரான நடவடிக்கைகள்

## வான்முகில் உள்ளக புகார் குழு

### முன்னுரை

இன்றைய சூழலில் பணியிடங்களில் பெண்கள் பல்வேறு வகையான துன்புறுத்துதல்களுக்கு உள்ளாகின்றனர். இவ்வாறான பாலியல் துன்புறுத்துதல்களைத் தடுத்தும் நிறுத்தும் நோக்கில் இந்தியாவில் பல்வேறு சட்டங்களும், உச்சநீதிமன்ற தீர்ப்புரைகளும் உள்ளன. பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்துதல்கள் பெண்களுக்கு எதிரான வன்முறையே என்று ஐ.நா. அமைப்புகளும் தெளிவுபடுத்தியுள்ளன. பெண்களது உடல்நலம் பாதிக்கின்ற வகையிலோ, அவர்களது பாதுகாப்பு கேள்விக்குள்ளாக்கப்படும் வகையிலோ பணியிடங்கள் இருக்கக் கூடாது. வான்முகில் அமைப்பு இந்த கொள்கையை இதன் அடிப்படையில் உருவாக்கியுள்ளது. அவ்வாறு பெண்களுக்கு துன்புறுத்துதல்கள் ஏற்படுத்தும் பணியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற நோக்கில் இக்கொள்கை தயார் செய்யப்பட்டுள்ளது.

### வரையறைகள்

பாலியல் துன்புறுத்தலானது இந்திய அரசியலமைப்பு சாசனத்தின் 14, 15 மற்றும் 21 ஆகிய சட்டப் பிரிவுகளின் கீழ் ஒரு பெண்ணுக்கு வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மீறுவதாகும்.

ஒரு பெண்ணுக்கு வாழ்வுரிமை மற்றும் கண்ணியத்தோடு வாழும் உரிமை, எந்தப் பணியிலும் ஈடுபடும் உரிமை அல்லது எந்த ஒரு வேலை அல்லது தொழிலையும் மேற்கொள்ளும் உரிமை, பாலியல் துன்புறுத்தல் இல்லாத பாதுகாப்பான சூழல் உரிமை இவை அனைத்தும் இந்திய அரசியல் அமைப்பு உத்திரவாதம் வழங்கும் பிரிவு 21-ன் கீழ் வரும்.

### பாலியல் துன்புறுத்தல் என்றால் என்ன?

பாலியல் துன்புறுத்தல் என்பது பெண்களுக்கு எதிரான பாலினம் சார்ந்த வன்முறையாகும். இதர வடிவிலான வன்முறையை போலவே இதுவும் பெண்களின் உள்ளார்ந்த மாண்பை சீர்குலைத்து பாலின அடிப்படையில் பாடுபடுத்துகின்ற செயலாகும். இந்த செயல் பெண்களுக்கு,

1. சமவாய்ப்பு 2. மாண்பு 3. பாதுகாப்பு போன்றவற்றை சமமாக பெறுவதில் அவர்களுக்கென்று உள்ள உரிமைகளை தட்டிப்பறிக்கின்ற செயலாகும். இந்திய அரசியலமைப்பு சாசனத்தின் பிரிவுகள் - 14, 15, 16, 19, 21 ஆகியவற்றை இந்த பாலியல் துன்புறுத்தல் செயல்கள் மீறுபவை ஆகும்.

பாலியல் துன்புறுத்தல் என்பது

- ❖ உடல் ரீதியான தொடுதல் அல்லது தொட முயற்சித்தல்
- ❖ பாலியல் சலுகைக்கான கோரிக்கை அல்லது வேண்டுகோள்
- ❖ பாலியல் அர்த்தமுள்ள கருத்துக்கள் கூறுவது
- ❖ ஆபாசப்படம் காட்டுவது
- ❖ பாலியல் தன்மையுள்ள விரும்பத்தகாத வேறு எந்த உடல் செய்கை அல்லது வாய் மொழியான அல்லது சைகை
- ❖ உரசுதல்
- ❖ தொடுதல்
- ❖ அந்தரங்க உறுப்புகளை தொடுதல்
- ❖ முத்தமிடுதல்

உள்ளக புகார் குழுக்களை அமைத்தல்

ஒவ்வொரு பணித்தளத்திலும், எழுத்துப்பூர்வமாக ஒரு ஆணையின் மூலமாக "உள்ளக புகார் குழு"வை பாலியல் ரீதியான புகார்கள் குறித்து விசாரிப்பதற்கும், மேல் நடவடிக்கை எடுக்கவும் கட்டாயமாக அமைத்திடல் வேண்டும். இவ்வாறு வான்முகில் அமைப்பில் இக்குழுவை உருவாக்கி, செயல்பட வைக்கவும், தவறிழைக்கும் பணியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

புகாரும் விசாரணையும்

பணித்தளத்தில் பாலியல் துன்புறுத்தலால் பாதிக்கப்படும் எந்த ஒரு பெண் பணியாளரும் அது குறித்த புகாரினை சம்பவம் நடந்த மூன்று மாத காலத்திற்குள் உள்ளக புகார் குழுவிடம் தெரிவிக்க வேண்டும். இச்சம்பவம் தொடர்ச்சியாக நடக்கும் ஒரு செயலாக இருக்குமாயின் கடைசி சம்பவம் நடைபெற்ற மூன்ற மாத காலத்திற்குள், எழுத்து பூர்வமாக புகார் அளிக்க வேண்டும்.

புகார் மீதான விசாரணை

பாதிக்கப்பட்ட பெண் பணியாளர் எழுத்துப்பூர்வமாக அளித்த புகார் மீதான விசாரணையை புகார் பெற்ற நாளிலிருந்து, 90 நாட்களுக்குள் முடிக்க வேண்டும். அவ்வாறு விசாரணை மேற்கொள்ளும் பொழுது, குழுவானது பாதிக்கப்பட்ட அப்பெண் பணியாளர் எழுத்துப்பூர்வமான புகார் அளிக்க முடியாத சூழலில் இருக்கும் பட்சத்தில், உள்ளக புகார் குழுத் தலைவரோ அல்லது உறுப்பினரோ, அப்பெண்

எழுத்துப்பூர்வமாக புகார் அளிக்க தேவையான அனைத்து உதவிகளையும், வசதிகளையும் செய்து தர வேண்டும்.

குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள், பாதிக்கப்பட்ட அந்த பெண் பணியாளர் புகார் அளிக்க முடியாமல் தடுக்கவோ அல்லது வேறு தடைகளோ இருக்கிறது என்று குழுவினர் கருதுவார்களேயானால் அந்த பெண்ணுக்கு கால அவகாசத்தை நீட்டித்து வழங்கலாம்.

பாதிக்கப்பட்ட பெண்ணின் மனநிலை மற்றும் உடல்நிலையை பொறுத்து அவரால் புகார் அளிக்க வர இயலாது என்கின்ற பட்சத்தில் அவரது சட்டப்பூர்வ வாரிசு அல்லது வேறு நபர் அவரின் சார்பாக குழுவிடம் புகார் அளிக்கலாம்.

உள்ளக புகார் குழு பாதிக்கப்பட்ட பெண் பணியாளரிடம் இருந்து புகார் கிடைக்கப் பெற்றவுடன் உடனடியாக புகார் மீதான விசாரணையை துவங்காமல் பாதிக்கப்பட்ட அப்பெண்ணின் வேண்டுகோளுக்கிணங்க

- சம்பந்தப்பட்ட எந்தவொரு நபருக்கும் அழைப்பாணை அனுப்புதல்
- குறிப்பிட்ட அந்த நபரை நேரில் வரக் கட்டாயப்படுத்துதல்
- உறுதிமொழி ஏற்று அந்த குறிப்பிட்ட நபரிடம் விசாரணை நடத்தலாம்
- ஆவணங்களை கோரியும், தகவல்களை கண்டறிய ஆவணங்களை தாக்கல் செய்ய கோரலாம்.

**விசாரணை நிலுவையில் உள்ள போது எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்**

ஒரு புகார் மீதான விசாரணை நிலுவையில் உள்ள போது புகார் அளித்த பாதிக்கப்பட்ட பெண் எழுத்துப்பூர்வமாக கோரிக்கையை குழுவினருக்கு விடுப்பாரேயானால் இயக்குனர் கீழ்காணும் நடவடிக்கைகளை உள்ளக புகார் குழு பரிந்துரை செய்யலாம்.

- பாதிக்கப்பட்ட புகார் அளித்த பெண் பணியாளர் அல்லது எதிர்மனுதாரரை வேறு பணித்தளத்திற்கு இடம் மாறுதல் செய்வது.
- பாதிக்கப்பட்ட பெண் பணியாளருக்கு மூன்று மாத காலம் வரை விடுப்பு அளிப்பது. பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு வழங்கப்படும் விடுப்பு அவருக்கு உரிமையுள்ள விடுப்புகளை விட கூடுதலாகும்.
- பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய வேறு நிவாரணங்களை வழங்குதல்.

விசாரணை அறிக்கை

உள்ளக புகார் குழுவானது தனது விசாரணை முழுமையாக முடித்த பிறகு, 10 நாட்களுக்குள் தனது அறிக்கையை மேல் நடவடிக்கைக்காக இயக்குனரிடம் வான்முகில் நிர்வாகக் குழுவிடம் அளிக்க வேண்டும்.

எதிர் மனுதாரர் மீதான புகார் நிரூபிக்கப்படவில்லை எனும் பட்சத்தில் புகார் குழுவானது இயக்குனருக்கு எவ்வித நடவடிக்கையும் எதிர் மனுதாரர் மீது எடுக்க தேவை இல்லை என்பதை பரிந்துரைக்கலாம்.

எதிர் மனுதாரர் மீதான புகார் நிரூப்பிக்கப்பட்ட சூழலில் இயக்குனருக்கு வான்முகில் நிர்வாகக் குழுவிற்கு கீழ்காணும் பரிந்துரைகளை உள்ளக புகார் குழு அளிக்கலாம்.

- பாலியல் துன்புறுத்தல் ஒரு நடத்தை என்கிற முறையில் எதிர் மனுதாரர் மீது அவருக்கு பொருந்துகின்ற பணி விதிகள் இல்லாத நிலையில், ஒப்புக்கொள்ளப்பட்ட வழிவகையில் நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்கலாம்.
- பாதிக்கப்பட்ட பெண்ணுக்கோ அல்லது அவரது சட்ட வாரிசுக்கு இழப்பீடு வழங்கும் போது, எதிர் மனுதாரரின் பணி விதிகள் எப்படி இருந்தாலும் எதிர் மனுதாரரின் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்து வழங்க வேண்டும்.
- எதிர் மனுதாரர் வேலைக்கு வராத நிலையில் அல்லது இடை நிறுத்தம் செய்யப்பட்ட நிலையிலோ அல்லது வேலையிலிருப்பவரால் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்ய முடியாத நிலையில் / எதிர் மனுதாரர் தாமாகவே அந்த தொகையை வழங்க குழு ஆணையிடலாம்.

இவை அனைத்தும் விசாரணைக் குழு தனது பரிந்துரைகளை சமர்ப்பித்த அறுபது நாட்களுக்குள் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

தவறான அல்லது தீய நோக்கமுள்ள புகார் அல்லது தவறான ஆதாரத்திற்கான உண்டான தண்டனை

எதிர்மனுதாரர் மீதான புகார் தீய நோக்கத்துடன் செய்யப்பட்டுள்ளது என்றோ அல்லது பாதிக்கப்பட்ட பெண்ணோ, புகார் செய்யும் வேறு நபரோ அந்த புகார் தவறானது என்று தெரிந்தே, புகார் செய்திருக்கின்றார்கள் என்றோ அல்லது பாதிக்கப்பட்ட பெண்ணோ அல்லது புகார் செய்யும் வேறு நபரோ மோசடியான அல்லது தவறான ஆவணத்தை தாக்கல் செய்திருப்பதாகவே உள்ளக புகார் குழு முடிவுக்கு வருமேயானால், இயக்குனர் பாதிக்கப்பட்ட பெண் அல்லது புகார் செய்த நபர்

மீது, பொருந்துகின்ற விதிகளின் படி நடவடிக்கைகள் அல்லது எத்தகையை பணி விதிகள் இல்லாத நிலையில் ஒப்புக்கொள்ளப்பட்ட வழி முறையை குழு பரிந்துரைக்கலாம்.

**இழப்பீட்டை தீர்மானித்தல்**

பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு இழப்பீட்டு தொகையை தீர்மானிப்பதற்கு கீழ்காணும் கருத்துகளை புகார் குழு கவனத்தில் கொள்ள வேண்டும்.

- பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ஏற்பட்ட மன உளைச்சல், வலி, துயரம் மற்றும் உணர்வு.
- பாலியல் துன்புறுத்தல் சம்பவத்தின் காரணமாக ஏற்பட்ட வேலை இழப்பு.
- உடல் சார்ந்த அல்லது உளவியல் சிகிச்சைக்காக பாதிக்கப்பட்டவருக்கு ஏற்பட்ட மருத்துவச் செலவு.
- பாதிக்கப்பட்ட பெண்ணின் வருமானம் மற்றும் நிதிநிலை.
- இழப்பீட்டு தொகையை மொத்தமாக வழங்க வேண்டிய நிலை உள்ளதா அல்லது தவணை முறையில் வழங்க இயலுமா என்பதை கண்டறிந்து பரிந்துரைக்க வேண்டும்.

**மேல்முறையீடு**

பாதிக்கப்பட்ட நபர் பரிந்துரைகள் அளிக்கப்பட்ட 90 நாட்களுக்குள் தன்னுடைய பணி விதிகளுக்கு உட்பட்டோ அல்லது அந்த கால கட்டத்தில் அமலில் உள்ள சட்ட விதிகளுக்கு முரணாக இல்லாமல் மேல்முறையீடு செய்யலாம்.

**வான்முகில் உள்ளக புகார் குழு**

இக்குழுவில் ஏழு பேர் உண்டு. கிராம வழிநடத்துனர்கள் நால்வர் (ஒவ்வொரு வட்டாரத்திற்கும் இருவர்), களப்பணியாளர்கள் இருவர் மற்றும் திட்ட மேலாளர்.

| வ. எண் | பெயர் | வசிக்கும் பொறுப்பு | செல்பேசி எண் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |